1981 பிப்ரவரி 9]

மாண்புமிகு திரு. எஸ் இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 1982-ல் எடுத்துக் கொள்ளலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எத்தனை கோடி ரூபாய் மதிப்பீட்டில் தயாரிக்கப்படுகிறது? எந்த ஆண்டு முடிவு அடையும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இப்போது உத்தேச மதிப்பீடு மீது அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம் செயலுக்கு 1982 ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படலாம்.

உசிலம்பட்டிக்கு குடிநீர் வழங்கு திட்டம்.

*வினா எண் 249—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உசிலம்பட்டி நகரத்திற்கு வைகை நதியிலிருந்து குடிநீர் கொண்டு வரும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் மேற்படி செயற் குறிப்பு எப்போது நடைமுறைக்கு வரும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) உசிலம்பட்டி பேரூராட்சிக்கு வைகை நதியிலிருந்து குடிநீர் கொண்டு வரும் திட்டத்திற்கு அரசு ஜனவரி 1980-ல் ஒப்புதல் அளித்துள்ளது.

(ஆ) செயலாக்கத்திலுள்ள இத்திட்டம் மார்ச் 1982-ல் நடைமுறைக்குக் கொண்டு வரப்படலாம்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, இதற்காக எவ்வளவு ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

[1981 பிப்ரவரி 9

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் ரூ. 56.35 இலட்சத்தில் அமைக்கப்படும். பராமரிப்புச் செலவு ரூ. 1.65 இலட்சம்.

திரு. இரா. முத்தையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டிக்கு வைகை நதியில் இருந்து தண்ணீர் கொடுக்கும் திட்டம் 1979 ஆம் ஆண்டிலேயே தொடங்குவதாக இருந்தது. காலதாமதம் ஏன் என்று தெரியவில்லை. 1982 வரையில் காத்து இருக்காமல், வரும் நிதியாண்டிலேயே எடுத்துக் கொள்ள அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டம் செயலாக்கத்தில் உள்ளது. 1982 ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்திற்குள் முடிவு அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கா. கோபாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, வைகை நதியில் இருந்து உசிலம்பட்டிக்குக் குடிநீர் கொண்டு வரும் திட்டத்தால் இடையில் உள்ள கிராமங்களுக்கும் பயன் கிடைக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, அதைப்பற்றிய விவரமான தகவல் என்னிடத்தில் இல்லை.

ஆயக்குடி பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கு திட்டம்.

*வினா எண் 250— திரு. என். பழனிவேல் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பழனி வட்டம் ஆயக்குடி பேரூராட்சிக்கு வரதமா நதி அணையிலிருந்து குடி நீர் கொண்டு வரும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) இந்த ஆண்டுக்குள் அத்திட்டம் நிறைவேற்றித் தரப் படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) செயலாக்கத்திலுள்ளது.

(ஆ) மார்ச் 1982-க்குள் முடிவுறும் என எதிர் பார்க்கப் படுகிறது.